அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
**ANG MO KIO TAMIL METHODIST CHURCH**

## ஆராதனை ஒழுங்கு / Order of Service
## கிறிஸ்து பிறந்த திருநாள் / Christmas Service
**25th December, 2023 / 25 மார்கழி 2023, 9.30 pm**

✝ ஆராதனைக்கு அழைப்பு — ***திரு. ஜேக்கப் ஜான்சன் பாபு***
Call to Worship — Mr. Jacob Johnson babu

நடத்துபவர்: உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும்
சபையார்: பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக.
நடத்துபவர்: இதோ எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.
சபையார்: உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமை உண்டாவதாக.
நடத்துபவர்: இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்.
சபையார்: உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக.

இறை வணக்கப் பாடல் — பாடகர் குழு
Introit — Choir

ஜெபம் — ***திரு. ஜேக்கப் ஜான்சன் பாபு***
Prayer — Mr. Jacob Johnson babu

கிறிஸ்துமஸ் தினம் / கிறிஸ்து மெழுகுவர்த்தி
Candle lighting / Christ Candle

✝ தொடக்கப் பாமாலை — சபையார் யாவரும்
Opening Hymn — Congregation

1. பக்தரே வாரும் ஆசை ஆவலோடும்
நீர் பாரும் நீர் பாரும் இப்பாலனை
வானோரின் ராஜன்
கிறிஸ்து பிறந்தாரே

சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
இயேசுவை.

2. தேவாதி தேவா, ஜோதியில் ஜோதி
மானிட தன்மை நீர் வெறுத்திலீர்
தெய்வ குமாரன்,
ஒப்பில்லாத மைந்தன்

3. மேலோகத்தாரே, மா கெம்பீரத்தோடு
ஜென்ம நற்செய்தி பாடி போற்றுமேன்
"விண்ணில் சந்தோஷம்
மண்ணில் சமாதானம்!"

4. இயேசுவே வாழ்க! நீரே ஜென்மித்தீரே,
புகழும் ஸ்துதியும் உண்டாகவும்
அன்பின் சொரூபி
அருள் அவதாரம்.

✝ மாறி மாறி வாசித்தல் — லூக்கா 1 : 68 – 79
Responsive Reading — **Luke 1 : 68 – 79**

ஆராதனை நடத்துபவர்: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. அவர் தமது ஜனத்தைச் சந்தித்து அதற்கு மீட்பை உண்டுபண்ணினாரே,

சபையார்: ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே,

ஆராதனை நடத்துபவர்: தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார்,

சபையார்: இது நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும் தப்புவிக்கும் இரட்சிப்பு.

ஆராதனை நடத்துபவர்: அவர் தமது பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி, நம்முடைய பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின இரக்கத்தைக் காட்டி,

சபையார்: நமது பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்,

ஆராதனை நடத்துபவர்: நம்முடைய சத்துருக்களின் கைகளினின்று நாம் விடுதலையாக்கப்பட்டு,

சபையார்: நாம் உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் அவருக்கு முன்பாகப் பக்தியோடும் நீதியோடும் ஊழியஞ் செய்ய அருளுவதற்குமே அப்படிச் செய்தார்.

ஆராதனை நடத்துபவர்: நீயோ பாலனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்,

சபையார்: நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினிமித்தம் பாவ மன்னிப்பினால் வரும் இரட்சிப்பைக் கர்த்தருடைய ஜனத்துக்குத் தெரியப்படுத்தும் பொருட்டு,

ஆராதனை நடத்துபவர்: அவருக்கு முன்னாக நடந்துபோய் அவர் வழிகளை ஆயத்தஞ் செய்வாய். அவ்விரக்கத்தினால் உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம்,

சபையார்: அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சந்தரவும் நம்முடைய கால்களைச் சமாதான வழியில் நடத்தவும் நம்மைச் சந்திக்கும் என்பதே.

✝ ***தந்தை போற்றி*** — சபையார் யாவரும்
Gloria Patri — Congregation

**ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்** — **மறைதிரு. விஜய் ஜோஸப்**
Thanksgiving & Pastoral Prayer — Rev. Vijay Joseph

**பரமண்டல ஜெபம்** — சபையார் யாவரும்
Lord's Prayer — Congregation

✝ காணிக்கைப் பாடல் — சபையார் யாவரும்
Offertory Song — Congregation

பெத்தலையில் பிறந்தவரைப்
போற்றித் துதி, மனமே - இன்னும்

1. சருவத்தையும் படைத்தாண்ட சருவவல்லவர் இங்கு
தாழ்மையுள்ள தாய்மடியில் தலைசாய்க்கலானார், - பெத்தலையில்

2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தனார் இங்கு
பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார். - பெத்தலையில

3. முன்னம் அவர் சொன்னபடி முடிப்பதற்காக இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே, - பெத்தலையில்
4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர் இங்கு
ஆக்களுட சத்தத்துக்குள் அழுது பிறந்தார். - பெத்தலையில்

5. இத்தடைவாய் அன்பு வைத்த எம்பெருமானை நாம்
எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே. - பெத்தலையில்

✝ பூலோகத்தாரே யாவரும் (திரையில்)
Doxology (Screen)
சபையார் யாவரும்
Congregation

சிறப்புப் பாடல்
Special Song
பாடகர் குழு
Choir

✝ திருமறைப் பாடம்
லூக்கா 2 : 8 – 20
Scripture Lesson
L**uke 2 : 8 – 20**
**திரு.தனபாலன்**
Mr. Dhanapalan

அருளுரை
Sermon
***மறைதிரு. விஜய் ஜோஸப்***
*Rev. Vijay Joseph*

✝ அர்ப்பணக் கீதம்
Closing song
சபையார் யாவரும்
Congregation

1.உன்னத தேவனுக்கே மகிமை
உலகில் சமாதானமாமே
காரிருள் நீக்கிட குவலய மீதிலே
பேரொளியாய் ஜெனித்தார்

அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா துதியவர்க்கே
அல்லேலூயா அல்லேலூயா
அல்லேலூயா துதியவர்க்கே
அல்லேலூயா துதியவர்க்கே

2.மானிடர் மேலிவர்க் கன்பிதுவோ
மனுக் கோலமாய் மனு வேலனார்
மாட்சிமை யாவையும் துறந்தே
இவ்வுலகில்
மானொளியாய் ஜெனித்தார்

3. தாரகையென
அவர் தோன்றிடவே
நேர் பாதையில் நடந்திடவே
தற்பரன் கிருபையும் சத்தியம் ஈந்திட
தண்ணொளியாய் ஜெனித்தார்

4.வாழ்த்துவோம் பாலகன் இயேசுபரன்
வல்ல தேவனின் ஏகசுதன்
வாஞ்சித்தாரே எம்மில் வாசம்
செய்திடவே
மெய்யொளியாய் ஜெனித்தார்

அறிவிப்புகள்
Announcements

✝ முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்
Closing Prayer & Benediction
***மறைதிரு. விஜய் ஜோஸப்***
*Rev. Vijay Joseph*

✝ ஆசீர்வாதப் பாடல்
Benediction Song
சபையார் யாவரும்
Congregation

***சீர் இயேசு நாதனுக்கு ஜெயமங்களம்***
***ஆதி திரியேக நாதனுக்கு சுபமங்களம்***

**பாரேறு நீதனுக்கு பரம**
**பொற்பாதனுக்கு**
**நேரேறு போதனுக்கு நித்திய**
**சங்கீதனுக்கு**

*மானாபி மானனுக்கு வானனுக்கு*
*மங்களம்*
*வளர் கலைக் கியானனுக்கு*
*ஞானனுக்கு மங்களம்*
*கானான் நல் தேயனுக்குக் கன்னி*
*மரிசேயனுக்கு*
*கோனார் சகாயனுக்கு கூறு பெத்த*
*லேயனுக்கு.*

***We wish you a merry Christmas (3)***
***And a happy New Year***
***Glad tidings we bring, to you and your kin***
***Glad tidings for Christmas and a happy***
***New Year***
***We wish you a merry Christmas (3)***
***And a happy New Year***

✝ **சபையார் நிற்கவும் /** Indicates Congregation standing


***We wish you a Merry Christmas***